**பிரிவு அ : செய்யுளும் மொழியணியும் (கேள்வி 1 - 5)**

**பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி நேரம்**

**(5 புள்ளிகள்)**

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கு ஏற்ற இரட்டைக் கிளவியைத் தெரிவு செய்க.

| |
|---|
| சாட்டையால் அடிக்கும்போது ஏற்படும் ஒலி |

A. தட தட

B. பளீர் பளீர்

C. மட மட

D. கல கல

2. கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்கு ஏற்ற மரபுத் தொடர் எது?

| |
|---|
| விளையாட்டுத் துறையில் தன் பெயரை நிலைநாட்ட வேண்டும் என்ற முகிலனின் எண்ணம் நிறைவேறியது. |

A. திட்ட வட்டம்

B. தட்டிக் கழித்தல்

C. கை கூடுதல்

D. ஈவிரக்கம்

3. கொடுக்கப்பட்டுள்ள உலக நீதியை நிறைவு செய்க.

| |
|---|
| தனந்தேடி யுண்ணாமற் ---------------- வேண்டாம் |

A. பதைக்க B. சிதைக்க C. விதைக்க D. புதைக்க



LIVEWORKSHEETS

4. உலக நீதிக்கு ஏற்றப் பொருளைத் தெரிவு செய்க.

மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்


A பகைவன் உறவு கொண்டாலும் அவனை நம்பக் கூடாது.

B தன்னை நம்பி வந்தவரை ஒருபோதும் கெடுக்கக்கூடாது.

C செல்லத்தகாத இடங்களுக்குச் செல்லக் கூடாது.

D நல்லவர்களுடைய நட்பு இல்லாதவர்களுடன் பழக்கம் வைத்துக் கொள்ளக்கூடாது.

5. கீழ்க்காணும் சூழல் உணர்த்தும் செய்யுளின் மூன்றாம் அடியைத் தெரிவு செய்க.




A வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி

B ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்

C வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே

D கோணாகி யான் எனது என்றவரைக் கூத்தாட்டு

SULIT

LIVEWORKSHEETS

## பிரிவு ஆ : இலக்கணம் (கேள்வி 6 - 10)

**(5 புள்ளிகள்)**

6. பின்வரும் வாக்கியத்தைச் சரியான இடைச்சொல்லைக் கொண்டு நிறைவு செய்க.

கவியழகன் மொழியாற்றல் மிக்கவன். _______________, போட்டியில் முதல் நிலையை அடையவில்லை.

A. ஆகையால்

B. எனினும்

C. அதற்காக

D. ஆதலால்

7. செயப்பாட்டுவினை வாக்கியத்தைச் செய்வினை வாக்கியமாகத் தெரிவு செய்க.

| |
|---|
| யாழினியால் எழுதப்பட்ட சிறுகதை புத்தகம் அனைவராலும் வாங்கப்பட்டது. |

A. யாழினி எழுதிய சிறுகதை புத்தகம் அனைவரும் வாங்கினர்.

B. யாழினி எழுதிய சிறுகதை புத்தகத்தை அனைவரும் வாங்கினர்.

C. யாழினி எழுதிய சிறுகதை புத்தகத்தை அனைவராலும் வாங்கப்பட்டது

8. திரிதல் விகாரப் புணர்ச்சி சொல்லைத் தெரிவுச் செய்க.

A. கைக்குட்டை

B. அறவினை

C. சொறிசிரங்கு

D. பொற்குடம்



LIVEWORKSHEETS

9. கீழ்க்காணும் அயற்கூற்று வாக்கியத்திற்கு ஏற்ற நேர்க்கூற்று வாக்கியத்தை தேர்ந்தெடுக.

| |
|---|
| அவள்தான் அந்தப் பரிசை வாங்கியதாகக் கயல்விழி கூறினாள். |

A. "நான் தான் இந்தப் பரிசை வாங்கினேன்," என கயல்விழி கூறினாள்.

B. "தான் தான் இந்தப் பரிசை வாங்கினேன்," என கயல்விழி கூறினாள்.

C. "அவள் தான் அந்தப் பரிசை வாங்கினேன்," என கயல்விழி கூறினாள்.

D. "நீ தான் இந்தப் பரிசை வாங்கினாய்," என கயல்விழி கூறினாள்.

| |
|---|
| காரவடை |

10. மேற்கண்ட சொல் எவ்வகை புணர்ச்சியைச் சேர்ந்தது என்பதைத் தெரிவு செய்க.

A. தோன்றல் விகாரப் புணர்ச்சி

B. இயல்பு புணர்ச்சி

C. கெடுதல் விகாரப் புணர்ச்சி

D. திரிதல் விகாரப் புணர்ச்சி



LIVEWORKSHEETS